# நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கு - நியதிகளும் நிபந்தனைகளும்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி இல் – PQ118 (இதனகத்துப் பின்னர் 'வங்கி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) திறந்து பேணப்படுகின்ற அனைத்து நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்குகளையும் பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் ஆளும்.

**கணக்கை ஆரம்பித்தல்**

01. நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கு ('NKIP கணக்கு') பராயமடையாத ஒருவரின் (கீழே வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) ஒன்றில் பெற்றோரொருவரினாலோ அல்லது சட்டரீதியான பாதுகாவலரொருவரினாலோ கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட எவரேனும் ஆளினால் ஆரம்பிக்கப்படலாம் (இதனகத்துப் பின்னர் 'வாடிக்கையாளர்' எனக் குறிப்பீடு செய்யப்படும்). வாடிக்கையாளர் முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் மரணமடைவாராயின், நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கிலுள்ள நிலுவையின் பயன்பெறுனராக இருப்பதற்கு பராயமடையாத ஒருவரை (நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாக நிர்ணயிக்கப்பட்டவாறு) (இதனகத்துப் பின்னர் 'பராயமடையாதவர்' என குறிப்பீடு செய்யப்படும்) கணக்கு ஆரம்பிக்கின்ற படிவத்தில் பெயர்குறிக்க வேண்டும். பராயமடையாதவரின் மூலப் பிறப்புச் சான்றுதலும் பராயமடையாதவரின் சட்டபூர்வமான பாதுகாவலர்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு (ஏற்புடையவிடத்து) வங்கியினால் வேண்டப்படும் சட்டரீதியான ஆவணங்களும், வங்கியின் கூர்தாய்விற்காக நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கினை ஆரம்பிக்கின்ற நேரத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. ஒவ்வொரு நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கிற்கும் ஒரு இலக்கம் வழங்கப்படும். அது வங்கியுடனான அனைத்து தொடர்புகளிலும் அத்துடன் அனைத்து வைப்புச் சீட்டுக்கள் மீதும் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட இலக்கத்தினை வங்கி, கணக்கு வைத்திருப்பவருக்கான அறிவித்தலுடன் மாற்றுவதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

**முதிர்ச்சி இலக்குத் தொகையும் முதிர்ச்சித் திகதியும்**

03. நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மெண்ட் பிளான் கணக்கானது ரூ. 100,000/- கொண்ட குறைந்தபட்ச முதிர்ச்சி இலக்குத் தொகையுடன் அத்துடன் ரூ. 10,000,000/- கொண்ட உயர்ந்தபட்ச இலக்குத் தொகையுடன் ஆரம்பிக்கப்படலாம்.

    "**முதிர்ச்சி இலக்குப் பெறுமதி**" என்பது வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் ('முதலீட்டுத் திட்டம்') கீழ் முதிர்ச்சித் திகதியன்று பெற்றுக்கொள்வதற்கு வங்கியுடன் வாடிக்கையாளர் ஒப்பந்தம்செய்கின்ற தொகை எனப் பொருள்படும்.

    'முதிர்ச்சித் திகதி' என்பது வங்கியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, வெளிநாட்டு நாணய முதலீட்டுத் திட்டக் கணக்கின் ('முதலீட்டுத் திட்டம்') கீழ் முதிர்ச்சி இலக்குப் பெறுமதியினை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்கின்ற திகதியாகும் எனப் பொருள்படும்.

04. இரண்டு வருடங்களைக் கொண்ட குறைந்த பட்ச காலப்பகுதியில் அல்லது 18 வருடங்களைக் கொண்ட உயர்ந்தபட்ச காலப்பகுதியில் முதிர்ச்சி இலக்குத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் தெரிவை மேற்கொள்ளலாம். ஆயின், எவ்வாறாயினும் பராயமடையாதவர் முதிர்ச்சித் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது.

05. மேலே 04 ஆம் வாசகத்திற்குட்பட்டு, கணக்கை ஆரம்பிக்கின்ற படிவத்தில் முதிர்ச்சி இலக்குத் தொகையினை குறித்துக்காட்டுவதன் மூலம் வாடிக்கையாளர் முதிர்ச்சி இலக்குத் தொகையினையும் தெரிவுசெய்ய வேண்டும். அதற்கமைய இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குத் தொகையினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவராக இருக்கும் பொருட்டு, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கில் முதலிடுவதற்கு வாடிக்கையாளர் வேண்டப்படுகின்ற மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகையினை வங்கி கணிப்பிட்டு அறிவிக்கும்.

**<u>தவணைக்கொடுப்பனவுகள்</u>**

06.

(அ) ஆரம்ப வைப்பு, இலக்கிடப்பட்ட முதிர்ச்சிப் பெறுமதி, முதலீட்டுக் காலம் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதம் என்பவற்றை பரிசீலனையில் கொண்டு மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகை வங்கியினால் கணிக்கப்படும்.

(ஆ) வாடிக்கையாளர் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு குறிப்பாக மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகையினை அதன் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வைப்பிலிடுவதற்கு இணங்குகின்றார். வாடிக்கையாளரினால் தெரிவு செய்யப்பட்ட முதிர்ச்சி இலக்குத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவராக இருக்கும் பொருட்டு மாதாந்தம் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்துடன் முதிர்ச்சி திகதி வரையிலும் மாதாந்த தவணைக் கொடுப்பனவினை முழுமையாக வைப்பிலிடுவது கட்டாயமானதாகும். வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு ஒவ்வொரு மாதமும் உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மாதாந்த தவணைக்கொடுப்பனவினை முழுமையாக வைப்பிலிடுவதற்கு வாடிக்கையாளர் தவறுகின்ற சந்தர்ப்பத்தில், முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குத் தொகையினை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்ள மாட்டார்.

07. 2020 ஒக்டோபர் 15 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினைத் ஆரம்பிப்பதற்கு தகைமைபெறும் பொருட்டு வாடிக்கையாளர், நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகைகளை வைப்பிலிடுவதற்கு வங்கியுடன் பேணப்படுகின்ற சேமிப்புக் கணக்கொன்றிலிருந்து/நடைமுறைக் கணக்கொன்றிலிருந்து நிலையியல் அறிவுறுத்தல்களை முன்வைக்க வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கான வைப்புகளாக பணத்தினை அத்துடன் வாடிக்கையாளரின் பெயரில் வரையப்பட்ட காசோலைகளை வங்கி ஏற்றுக்கொள்ளலாம். வேறு வங்கிகள் மீது வரையப்பட்ட காசோலைகள் விடயத்தில் காசோலைகள் தேறி, உரிய திகதியன்று தவணைக்கொடுப்பனவுத் தொகை வரவு வைக்கப்பட்டிருப்பின் மாத்திரம் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு தவணைக்கொடுப்பனவுத் தொகை வைப்பிலிடப்பட்டதாக கருதப்படும்.

08. கீழே 29 ஆம் வாசகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறானவைத் தவிர, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிலிருந்து முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மூலமான மீளெடுப்புகள் அனுமதிக்கப்படாது.

**<u>முதிர்ச்சி மீதான வட்டியும் கொடுப்பனவும்</u>**

09. நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிலுள்ள நாளாந்த மீதியின் மீது நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வீதங்களில் வட்டி கணிக்கப்பட்டு, முதிர்ச்சித் திகதி வரை நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு மாதாந்தம் வரவு வைக்கப்படும். வங்கியானது

சட்டத்தினால் அல்லது ஒழுங்குவிதியினால் அல்லது இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகாளால் அவ்வாறு செய்வதற்கு வேண்டப்படுமெனில், வட்டிவீதங்களை மாற்றுவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

10. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் வாடிக்கையாளர் இணங்கியொழுகியிருப்பாராயின், முதிர்சித் திகதியன்று அல்லது சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு முதலீட்டுக்காலப்பகுதியில் செலுத்தப்படத்தக்கவையாக இருக்கக்கூடிய ஏற்புடைய அரசாங்க வரிகள் மற்றும் வேறு நியதிச்சட்ட அறவீடுகளை கழிப்பதற்குட்பட்டு வங்கி, முதிர்ச்சித் திகதியன்று முதிர்ச்சி இலக்குத் தொகையினை கொடுப்பனவுசெய்யும்.

11. முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் முதிர்ச்சி இலக்குத் தொகையினை அடைந்துகொள்ளும் பொருட்டு வாடிக்கையாளர் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு தொகையை மொத்தமாக வைப்புச்செய்வாராயின், முதிர்ச்சி இலக்குத் தொகை அடையப்பெற்ற திகதியிலிருந்து நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு ஏற்புடைய ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதத்தினை வங்கி நிறுத்தும் என்பதுடன் முதிர்ச்சித் திகதி வரை வங்கியின் நியம சேமிப்புக் கணக்கு வீதத்தில் அல்லது வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு வீதத்தில் வட்டியைக் கணிக்கும்.

12. ஏதேனும் தரப்பட்ட நேரத்தில் வேண்டப்பட்ட மாதாந்த தவணைக்கொடுப்பனவுத் தொகைக்கு அதிகமாக அல்லது சொல்லப்பட்ட தவணைக்கொடுப்பனவின் பன்மடங்குகளை வாடிக்கையாளர் வைப்பிலிடுவாராயின் அத்துடன் முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் முதிர்ச்சி இலக்குத் தொகை அடையப்பெறுமாயின், முதிர்ச்சி இலக்குத் தொகை அடையப்பெற்ற திகதியிலிருந்து நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு ஏற்புடைய இணங்கிய வட்டி வீதத்தினை வங்கி நிறுத்தும் என்பதுடன் முதிர்ச்சித் திகதி வரை வங்கியின் நியம சேமிப்புக் கணக்கு வீதத்தில் அல்லது வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு வீதத்தில் வட்டியினைக் கணிக்கும்

13. முதிர்ச்சித் திகதியன்று வாடிக்கையாளர், முதிர்ச்சி இலக்குத் தொகையினை அடைந்துள்ளாரா அல்லது அடையவில்லையா என்பதனை பொருட்படுத்தாது, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கான வட்டி வீதம், நியம சேமிப்புக் கணக்கு வீதத்திற்கு அல்லது வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான வேறு வீதத்திற்கு மாற்றம் செய்யப்படும்.

14. வாடிக்கையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வேண்டப்பட்டவாறு கணக்கை ஆரம்பிக்கும் படிவங்களின் மீது தமது வரி நிலைமைகள் பற்றிய அத்துடன், வதிவிட நிலைமைகள் பற்றிய நியதிச்சட்ட பிரகடனத்தை பூர்த்திசெய்ய வேண்டும். வட்டிக் கொடுப்பனவுகள் மீதான பிடித்துவைத்தல் வரி அல்லது ஏதேனும் வேறு செலுத்தத்தக்க வரி, காலத்திற்குக் காலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது அத்தகைய வேறு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான வங்கியினால் கழிக்கப்படும். தொடர்புடைய அதிகாரியினால் பின்னதாக கோரப்பட்டிருக்குமெனில், கொடுப்பனவு செய்யப்படாத பிடித்துவைத்தல் வரிகளை வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

<u>காப்புறுதி</u>

15. பராயமடையாதவர், வாடிக்கையாளரின் சொந்த பிள்ளையாக இருப்பின் அல்லது சட்டத்தினால் சட்டபூர்வமான பாதுகாவலராக வாடிக்கையாளர் நியமிக்கப்பட்டிருக்கின்ற பராயமடையாதவராக இருப்பின் வங்கியானது நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களினுள் வாடிக்கையாளருக்காக ஆயுட்காப்புறுதி காப்பீடொன்றினை ஏற்பாடுசெய்யும். ஆயினும் ஆயுட்காப்புறுதி காப்பீடானது முதிர்ச்சித் திகதியன்று

முடிவுறுத்தப்படும் என்பதுடன், அதன் பின்னர் காப்புறுதி நலன்கள் எதுவும் கொடுப்பனவு செய்யத்தக்கதாக இராது.

16. காப்புறுதிக் காப்பீடானது முதிர்ச்சி இலக்குத் தொகையினைப் பொருட்படுத்தாது ரூ. 2,000,000/- கொண்ட உயர்ந்தபட்ச வரையரைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அதாவது முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணிக்கின்ற சந்தர்ப்பத்தில், கிடைக்கப்பெறத்தக்க காப்புறுதித் தொகை வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட முதிர்ச்சி இலக்குத் தொகையினை அடைந்து கொள்வதனை (அத்தொகை வாடிக்கையாளர் மரணிக்கின்ற நேரத்தில் அடையப் பெற்றிருக்காதிருப்பின்) இயலச்செய்யும். ஆயினும் ரூ. 2,000,000/- இனை விஞ்ஞாதிருக்கும். (உதாரணம்:- முதிர்ச்சி இலக்குத் தொகை ரூ. 2,000,000/- இற்கு மேல் உடைய வாடிக்கையாளர் ஒருவர் மரணிக்கின்ற நிகழ்வில் அத்துடன் வாடிக்கையாளர் மரணிக்கின்ற நேரத்தில் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கின் மூலதனம் மற்றும் ஒன்றுசேர்ந்த வட்டி ரூ. 2,500,000/- தொகையாக இருப்பின், காப்புறுதி எதுவும் கொடுப்பனவு செய்யத் தக்கதாக இராது).

**உதாரணம் :-** (அ) மரணிக்கின்ற நேரத்தில் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு மீதி (நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கில் உள்ள (மூலதனம் மற்றும் ஒன்றுசேர்ந்த வட்டி) ரூ. 350,000/- கொண்ட அத்துடன் அவரது முதிர்ச்சி இலக்குத் தொகை ரூ. 1,000,000/- ஆக விருக்கும் வாடிக்கையாளர் ஒருவரின் விடயத்தில், காப்புறுதி நலன் ரூ. 650,000.00 ஆகவிருக்கும் (அதாவது ரூ. 1,000,000.00 - ரூ. 350,000.00)

**உதாரணம் :-** (ஆ) மரணிக்கின்ற நேரத்தில் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு மீதி ரூ. 350,000.00 உடைய அத்துடன் அவரது முதிர்ச்சி இலக்குத் தொகை ரூ. 3,000,000.00 ஆக விருக்கும் வாடிக்கையாளர் ஒருவரின் விடயத்தில் காப்புறுதி நலன் ரூ. 1,650,000.00 ஆகவிருக்கும் (அதாவது ரூ. 2,000,000.00 - ரூ. 350,000.00)

**உதாரணம் :-** (இ) மரணிக்கின்ற நேரத்தில் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு நிலுவை ரூ. 350,000.00 ஆக அத்துடன் அவரது முதிர்ச்சி இலக்குத் தொகை ரூ. 2,500,000.00 ஆக விருக்கும் வாடிக்கையாளர் ஒருவரின் விடயத்தில் காப்புறுதி எதுவும் கொடுப்பனவு செய்யத் தக்கதாக இராது.

17. வாடிக்கையாளர் மரணிக்கின்ற நேரம் வரை இந்நியதிகளுடனும் நிபந்தனைகளுடனும் வாடிக்கையாளர் முழுமையாக இணங்கியொழுகியவிடத்து மாத்திரம் காப்புறுதி காப்பீட்டின் கீழான நலன்கள் கிடைக்கப்பெறக் கூடியதாகவிருக்கும்.

18. வாடிக்கையாளர் இரண்டு தவணைக்கொடுப்பனவுகளை தொடர்ச்சியாக நிலுவையாக கொண்டிருப்பாராயின், காப்புறுதிக் காப்பீடு முடிவுறுத்தப்படும். அத்தகைய நிகழ்வில், அத்தகைய தவணை தவறுகின்ற ஆண்டின் போது வாடிக்கையாளர் சார்பில் வங்கியினால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணத் (கட்டுப்பணங்கள்) தொகை, வாடிக்கையாளரின் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிலிருந்து பற்றுவைத்தல் உள்ளடங்கலாக வாடிக்கையாளரிடமிருந்து அறவிடுவதற்கு வங்கி உரித்துடையதாக இருக்கும்.

19. இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கி மாதாந்த தவணைக்கொடுப்பனவுகள் உரிய காலத்தில் வைப்பிலிடப்படுகின்றன என்பதனை உறுதி செய்வது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். தவணைக்கொடுப்பனவுகள் நிலுவையாகின்ற போது அல்லது தாமதமாகின்ற போது அல்லது அவ்வாறு ஏற்படுமெனில் அதன் விளைவாக காப்புறுதி காப்பீட்டின் கீழான நலன்கள் காலம் கடக்கக் கூடிய அல்லது காலம் கடந்துள்ளதை வாடிக்கையாளருக்கு அறிவிப்பதற்கு வங்கி பொறுப்பாகாது அல்லது பொறுப்பினைக் கொண்டிராது. எவ்வாறாயினும், வங்கியானது அதன் ஏக

தற்றுணிபில் அத்தகைய காலம் கடத்தல் பற்றி நிகழ்விற்கு முன்னர் அல்லது நிகழ்வின் பின்னர் அறிவித்தலை அனுப்பலாம்.

20. காப்புறுதிக் காப்பீடானது காப்புறுதி கம்பனியின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருக்கும் என்பதுடன் கோரப்படுமிடத்து/கோரப்படுமாயின் மருத்துவ மதிப்பீடுகள் உள்ளடங்கலாக காப்புறுதிக் கம்பனியின் அத்தகைய அனைத்து நியதிகளுடனும் நிபந்தனைகளுடனும் வாடிக்கையாளர் இணங்கியொழுகுதலும் வேண்டும். வாடிக்கையாளரை காப்பீடு செய்வதற்கு காப்புறுதிக் கம்பனியின் ஏதேனும் செயற்படாமை அல்லது நிராகரித்தலுக்காக வாடிக்கையாளருக்கு வங்கி பொறுப்பாகாது அல்லது பொறுப்பேற்காது. காப்புறுதிக் கம்பனியின் நியதிகளினதும் நிபந்தனைகளினதும் ஒரு பிரதி கோரிக்கையின் மீது வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

21. காப்புறுதிக் கம்பனியினால் வாடிக்கையாளர் உட்படுவதற்கு வேண்டப்படுகின்ற ஏதேனும் மருத்துவ மதிப்பீட்டின்/பரிசோதனைகளின் செலவு வாடிக்கையாளரினால் ஏற்கப்பட வேண்டும்.

22. பராயமடையாதவர் அல்லது அவரது பாதுகாவலர் அல்லது விடயத்திற்கு ஏற்றவாறு, வாடிக்கையாளரின் பின்னுரித்தாளர்கள், நிறைவேற்றுனர்கள் அத்துடன்/அல்லது நிருவாகிகள், காப்புறுதி கம்பனியின் ஏதேனும் தீர்மானத்தின் விளைவாக வங்கிக்கு எதிரான கோரிக்கைக்கு உரிமை எதனையும் கொண்டிருக்கமாட்டர், இது இறுதியானதும் முடிவானதுமாகவிருக்கும்.

<u>முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணமடைதல்</u>

23. முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் வாடிக்கையாளர் மரணமடைகின்ற சந்தர்ப்பத்தில், நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கானது வங்கியினால் மூடப்படும் என்பதுடன், பராயமடையாதவரின் பெயரில் நேஷன்ஸ் கிட்ஸ் கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கும் வாடிக்கையாளர் மரணமடைகின்ற திகதியில் உள்ளவாறான சொல்லப்பட்ட கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற மீதியினையும் கிடைக்கப்பெறத்தக்க காப்புறுதியின் ஏதேனும் பெறுகையுடன் அனைத்து ஒன்றுசேர்த்த வட்டியினையும் சேர்த்து, வாடிக்கையாளரினால் செலுத்தப்படத்தக்க வரிகளையும் நிதிச்சட்ட அறவீடுகளையும் கழித்து, நேஷன்ஸ் கிட்ஸ் கணக்கிற்கு மாற்றல்செய்வதற்கும் வாடிக்கையாளர் உடன்பட்டு வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

24. நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கானது காலத்திற்கு காலம் திருத்தப்படக்கூடியவாறான வங்கியின் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்குகளுக்கான நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆளப்படும்.

25. முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் பராயமடையாதவர் வாடிக்கையாளருக்கு முன்னரே மரணமடைந்திருப்பாராயின், அத்துடன் வாடிக்கையாளரும் மரணமடைந்திருப்பாராயின், வாடிக்கையாளரின் மரணத் திகதியன்றுள்ளவாறான நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிலுள்ள மீதியானது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைவாக வாடிக்கையாளரினால் கொடுப்பனவுசெய்யத்தக்க வரிகள் மற்றும் நியதிச்சட்ட அறவீடுகளைக் கழித்து வாடிக்கையாளரின் பின்னுரித்தாளர்களுக்கு, நிறைவேற்றுனர்களுக்கு அல்லது நிருவாகிகளுக்கு கொடுப்பனவுசெய்யப்படும்.

26. காப்புறுதி உரிமைக்கோரிக்கையினை செயன்முறைபடுத்தும் பொருட்டு வாடிக்கையாளரின் மரணம், வாடிக்கையாளரின் பின்னுரித்தாளரினால், நிறைவேற்றுனரால் அல்லது நிருவாகியினால் மரணத் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் வங்கிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**கணக்கை மூடுதல் / முடிவுறுத்தல்**

27. **தவணை தவறுதல்:** உரிய திகதியன்று ஏதேனும் தொடர்ச்சியாக இரு மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளின் கொடுப்பனவை மேற்கொள்வதில் வாடிக்கையாளர் தவணை தவறுவாராயின்,

    அ) நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கை மூடி ஒன்றுசேர்ந்த வட்டியுடன் முதலிடப்பட்ட முதன்மைத் தொகையினை வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு செய்வதற்கு.

    **அல்லது**

    ஆ) முதிர்ச்சித் திகதி வரை நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை தொடர்ந்தும் பேணுவதற்கு.

வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

28. மேலே 27 ஆம் வாசகத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட இரண்டு சூழ்நிலைகளிலும் தவணைதவறிய இறுதித் திகதியிலிருந்து தொடங்குகின்ற காலப்பகுதியிலிருந்து நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை மூடுகின்ற அல்லது முதிர்ச்சித் திகதி வரை (ஏற்புடையவாறு), வங்கியின் நியம சேமிப்புக் கணக்கு வீதத்தில் அல்லது வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறு வீதத்தில் வட்டி கணிக்கப்படும். நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கான நிலுவைகளின் தவணைக்கொடுப்பனவுகளை வாடிக்கையாளர் அதன் பின்னதாக வைப்புச்செய்வாராயின், அத்தகைய கணக்கு வங்கியினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றவிடத்தும் கூட இவ்விடயமே ஏற்புடையதாகவிருக்கும்.

29. **முதிர்ச்சிக் காலத்துக்கு முன்னர் மூடுதல்**: விதிவிலக்கான சூழ்நிலைகள் அத்துடன் வங்கியின் முற்றுமுழுதான தற்றுணிபு தவிர, முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை மூடுவதற்கு அத்துடன்/அல்லது அதில் உள்ள மீதியினை மீளெடுப்பதற்கு வாடிக்கையாளர் அனுமதிக்கப்படமாட்டார். முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை மூடுவதற்கு வாடிக்கையாளரை வங்கி அனுமதிக்கின்ற பட்சத்தில், வங்கியானது அத்தகைய கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூடுகின்ற திகதி வரை அதன் நியம சேமிப்புக் கணக்கு வீதத்தினை அல்லது வங்கியினால் நிர்ணயிக்கப்படுகின்றவாறான வேறு வீதத்தினை பிரயோகிக்கும் என்பதுடன் வாடிக்கையாளரினால் முதலிடப்பட்ட தொகை மீது வங்கியினால் ஏற்கனவே கொடுப்பனவு செய்யப்பட்ட மிகையான வட்டியினை அறவிடும்.

30. **வங்கியினால் மூடுதல்:** வங்கியானது அதன் ஒட்டுமொத்த தற்றுணிபில் அத்துடன் ஏதேனும் காரணத்தைக் குறித்தொதுக்காது வாடிக்கையாளரின் இறுதியாக அறிந்த அஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலம் அல்லது வங்கிக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளரின் இலத்திரனியல் அஞ்சல் (மின்னஞ்சல்) முகவரிக்கு 14 நாட்கள் அறிவித்தலை வழங்குவதன் மூலம் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை எந்நேரத்திலும் மூடுவதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

31. மேலே 27 அல்லது 29 ஆம் வாசகங்களில் விபரிக்கப்பட்ட எவையேனும் சூழ்நிலைகளின் கீழ் வங்கியினாலோ அல்லது வாடிக்கையாளரினாலோ நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு மூடப்படுகின்றவிடத்து, வங்கியானது அதன் தற்றுணிபில் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு ஏற்புடைய நன்மைகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் வங்கிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய காப்புறுதிச் செலவு அத்துடன்/அல்லது ஏதேனும் வேறு குறிப்பான செலவுகளை அறவிடலாம்.

32. இந் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை மூடுதல் மீது, வங்கியானது வாடிக்கையாளருக்கு பணத்தினை விடுவிப்பதற்கு முன்னர் ஏற்புடைய அரசாங்க வரிகளை அத்துடன் நியதிச்சட்ட அறவீடுகளை மற்றும் கணக்கை மூடுதல் கட்டணங்களை (ஏற்புடையவிடத்து) கழிக்கும்.

33. நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கினை மூடுதலானது 42 ஆம் நியதிகளுக்கமைவாக வங்கிக்கு உரித்தான உரிமைகளுக்கு பங்கமேற்படுத்தாது என்பதுடன் அதற்கமைய வங்கியானது 42 ஆம் வாசகத்தின் நியதிகளிலுக்கமைய அதன் உரிமைகள் பயன்படுத்தும் வரையிலும் நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிலுள்ள பணத்தினை விடுவிப்பதற்கான ஏதேனும் கடப்பாட்டிற்குட்படாதிருக்கும்.

**<u>பொதுவான நிபந்தனைகள்</u>**

34. வாடிக்கையாளரினால் தெரிவுசெய்யப்பட்ட நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கின் முதலீட்டை நிர்ணயிக்கின்ற விபரங்கள் பற்றிய அறித்தல், நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கை ஆரம்பிக்கின்ற நேரத்தில் வாடிக்கயைாளருக்கு வழங்கப்படும். வாடிக்கையாளருக்கு சேமிப்புப் புத்தகம் வழங்கப்படாது.

35. கணக்கு வாடிக்கயைாளரினால் தெரிவுசெய்யப்பட்டவாறு, ஒன்றில் காகித வடிவில் அல்லது இலத்திரனியல் ரீதியாக ஆண்டுக்கு இருமுறை கணக்குக் கூற்றினை வாடிக்கையாளருக்கு வங்கி வழங்கும். எவ்வாறாயினும், அதன் தற்றுணிபில், வாடிக்கையாளருக்கு வழங்கும் கூற்றின் கால இடைவெளியினை மாற்றுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

36. கூற்றுகளின் பிரதிகளை வங்கி 6 வருடங்களைக் கொண்ட (அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு வேறு காலப்பகுதிக்கு) காலப்பகுதிக்கு மாத்திரம் வைத்திருக்கும். அனைத்து அத்தகைய பதிவுகளும் 6 வருடங்களின் பின்னர் அழிக்கப்படும் என்பதுடன் 6 வருடங்களின் பின்னர் கூற்றுகளின் பிரதிகளை வழங்குவதற்கு வங்கி பொறுப்பெதனையும் ஏற்காது அல்லது பொறுப்புடையதாகாது.

37. வங்கிக் கூற்று கிடைக்கவேண்டிய உரிய திகதியிலிருந்து (அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 20 மற்றும் டிசம்பர் 31) 15 நாட்களினுள் வங்கிக் கூற்றை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்ளவில்லையாயின், அல்லது அது இலத்தினியல் வாயிலாக வங்கியினால் கிடைக்கப்பெறச் செய்யவில்லையாயின், வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும். பதிவுகளின் சரியானதன்மையினை உறுதிசெய்வதற்கு வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற ஒவ்வொரு கணக்குக் கூற்றினையும் பரீட்சிப்பதற்கு வாடிக்கையாளர் உடன்படுகின்றார். ஏதேனும் பிழைகள், வங்கிக் கூற்று கிடைக்கப்பெற்ற 21 நாட்களினுள் வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

38. அவரது கூற்றுகளின் பிரதிகளை பாதுகாப்பது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். வங்கியிடமிருந்து வங்கிக் கூற்றுகளின் பிரதிகள் கோரப்பட வேண்டுமாயின், அதன் வெளியிடப்பட்ட கட்டணத்திற்கு அமைவாக இச் சேவையினை வழங்குவதற்காக கட்டணங்களை அறவிடுவதற்கு வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

39. வங்கியின் ஏக தற்றுணிபில் அவ்வாறு செய்யப்பட்டாலன்றி, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கான பண அல்லது காசோலை வைப்புகளுக்கு அஞ்சல் மூலம் தனியான வாடிக்கையாளர் அறிவுறுத்தல்களை வங்கி அனுப்பாது.

40. வாடிக்கையாளரின் ஏதேனும் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் முகவரி மாற்றம் பற்றி வங்கிக்கு எழுத்தில் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

41. இந்நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் குறித்துரைக்கப்பட்டவாறு தவிர, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கீழ் ஏதேனும் உரிமைகளை அல்லது பொறுப்புகளை

கைமாற்றுதலாகாது அல்லது குறித்தொதுக்குதலாகாது என்பதுடன் அத்தகைய கொடுக்கலவாங்கலிருந்து நேரடியாக அல்லது நேரடியற்ற தோன்றுகின்ற ஏதேனும் நட்டத்தினால் வங்கி பிணிக்கப்பட்டடிராது அல்லது பொறுப்புடையதாகாது.

42. இதில் குறிப்பிட்வற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், வங்கியானது வாடிக்கையாளருக்கான அறிவித்தலின்றி, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கை வாடிக்கையாளரின் ஏதேனும் வேறு கணக்குடன் அல்லது வங்கிக்கான ஏதேனும் பொறுப்புகளுடன் ஒருங்கிணைப்பதற்கு அல்லது ஒன்றுசேர்ப்பதற்கு அத்துடன் அத்தகைய பொறுப்புகள், உண்மையாக அல்லது எதிர்பாராதவையாக, முதன்மையானவையாக அல்லது பிணையஉறுதியாக அத்துடன் பலதாக அல்லது இணைந்ததாக எதுவாகவிருப்பினும்சரி, வேறு ஏதேனும் கணக்கு மீது அல்லது ஏதேனும் வேறு தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு கடனாககொடுக்கவேண்டிய ஏதேனும் தொகைக்கு/தொகைகளுக்கு எதிராக நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கின் வரவில் இருக்கின்ற ஏதேனும் தொகையினை/தொகைகளை எதிரீடு செய்வதற்கு அல்லது மாற்றல்செய்வதற்கு வங்கி உரிமையினைக் கொண்டிருக்கும்.

43. வங்கி, அதன் ஏக அத்துடன் முழுமையான தற்றுணிபில், எந்நேரத்திலும் இந்நியதிகளை அல்லது நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்கு, திருத்தியமைப்பதற்கு அல்லது அவற்றுக்கு சேர்ப்பதற்கு உரிமையினைக் கொண்டிருக்கும்.

44. வேறுவகையில் உடன்பட்டாலன்றி, வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்கள், ஒன்றில் அஞ்சல் மூலம் அல்லது வங்கியின் இலத்திரனியல் தொடர்பாடல் வழிகள் ஊடாக அத்துடன்/அல்லது வங்கியினால் பொருத்தமானது எனக் கருதுகின்ற ஏதேனும் வேறு பொருத்தமான விதத்தில் எழுத்து மூலம் வழங்கப்படும்.

அறிவித்தல்கள் பின்வருமாறு செயற்பாட்டில் இருக்கும்:

அஞ்சல் மூலம் அனுப்பப்படுமாயின், அஞ்சல் செய்யப்பட்டு இரு நாட்கள்:

மின்னஞ்சல் வாயிலாக அல்லது வேறு இலத்திரனியல் வடிவத்தின் வாயிலாக அனுப்பப்படுமாயின், ஒப்படைத்தல் இடம்பெறாத அறிவித்தல் வங்கிக்கு கிடைக்கப்பெற்றாலன்றி அது அனுப்பப்பட்ட பின்னர் 24 மணித்தியாலங்கள், ஒப்படைத்தல் இடம்பெறாத விடயத்தில், வேறான விதத்தில் அது தொடர்பூட்டப்படும்.

அறிவித்தல்கள், நாளாந்த செய்தித் தாள்களில் பொதுமக்கள் அறிவித்தல்களாக, வங்கிக் கிளைகளில், தானியக்க பணமீளெடுப்பு இயந்திரங்களில் அல்லது வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடுவதன் வாயிலாக மேற்கொள்ளப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அவை வெளியிடப்பட்ட அல்லது பதிவிடப்பட்ட நேரத்தில் அல்லது தொடர்பூட்டலாக வங்கி குறிப்பிடுகின்ற அத்தகைய நேரத்தில் செயற்பாடுடையதாகவிருக்கும்.

மேற்குறித்த விதத்தில் அனுப்பப்படும் அறிவித்தல் போதுமானதாகவும் முறையான அறிவித்தலாகவும் கொள்ளப்படும் என்பதுடன், வாடிக்கையாளரைப் பிணிப்பதாகவும் இருக்கும்.

வாடிக்கையாளர் இற்றைப்படுத்தப்பட்ட தொடர்பு கொள்ளும் தகவல்களை வங்கிக்கு வழங்கவில்லையாயின் அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாததிலிருந்து தோன்றக்கூடிய ஏதேனும் நட்டத்தினை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். வங்கிக்கு இறுதியாக அறிவிக்கப்பட்ட முகவரியில்/தொடர்புகொள்ளும் தகவல்களில் வாடிக்கையாளரை இனிமேலும் அடையமுடியாது என வங்கி நியாயமாக நம்புகின்றவிடத்து, வங்கி அறிவித்தல்களை அனுப்புவதை இடைநிறுத்தலாம் அல்லது நிறுத்தலாம். அத்தகைய நிகழ்வில் வாடிக்கையாளர்

நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கிற்கு ஏற்புடைய அனைத்து அறிவித்தல் தேவைப்பாடுகளையும் தள்ளுபடி செய்கின்றார்.

45. இந்நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் கணக்கு, வங்கியின் பொதுவான தொழில் நிபந்தனைகளில் கூட்டிணைக்கப்பட்ட நியதிகளுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும், அவற்றினால் பிணிக்கப்பட்டும் இருக்கும்.

46. நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களால் ஆளப்படும்.

இதில் உள்ளடங்கியுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் நான் வாசித்துப் புரிந்துகொண்டேன் அத்துடன் அவற்றினால் பிணிக்கப்பட்டிருப்பதற்கு இணங்குகின்றேன்.

வாடிக்கையாளரின் கையொப்பம்